**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**
************

**<u>ஊடக அறிக்கை</u>**

# உலகளாவிய இந்திய வாரம் 2020 தொடக்க விழாவில் பிரதமர் ஆற்றிய உரை

சகல தரப்பிலிருந்தும் பங்கேற்றுள்ள சிறப்புமிக்க விருந்தினர்களுக்கு வணக்கம்! அனைவருக்கும் இந்தியாவின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த வெளிநாடு வாழ் இந்தியக் குழுவினரை நான் பாராட்டுகிறேன். கடந்த சில வருடங்களாக வெளிநாடு வாழ் இந்தியர்கள் ஏற்பாடு செய்துவரும் அருமையான பணியின் ஓர் அங்கமாக இந்த நிகழ்ச்சி அமைந்துள்ளது. உங்களது நிகழ்ச்சிகளால், இந்தியாவில் உள்ள வாய்ப்புக்களை உலகளவிலான மக்களுக்கு கொண்டுசேர்க்க முடிந்துள்ளது. இந்தியாவுக்கும், பிரிட்டனுக்கும் இடையிலான உறவுகளைப் பலப்படுத்த நீங்கள் உதவியிருக்கிறீர்கள். இந்த ஆண்டு நடைபெறும் நிகழ்ச்சி, மற்ற நாடுகளுக்கும் சென்றடைவதாக உள்ளது என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். மீண்டும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறன். அடுத்த ஆண்டில், நீங்களும் மையக்களத்திற்கு வந்து விம்பிள்டனை கண்டு மகிழ்வீர்கள் என்று நம்புகிறேன்.

நண்பர்களே,

இந்தக் காலக்கட்டத்தில், மீட்சி பெறுதல் பற்றி பேசுவது இயல்பானதாக உள்ளது. உலகளவிலான மீட்சி மற்றும் இந்தியா தொடர்பாக பேசுவதும் அதே அளவுக்கு இயல்பானது. உலக அளவிலான மீட்சியில் இந்தியா முதன்மைப் பங்கு வகிக்கும் என்று சொல்லப்படுவதில் நம்பிக்கை உள்ளது. இரண்டு அம்சங்களுடன் இது தொடர்பு கொண்டிருப்பதாக நான் கருதுகிறேன். முதலாவது விஷயம் - இந்தியாவின் திறமை. உலகம் முழுவதிலும் இந்தியாவின் திறன்

வளத்தின் பங்களிப்பை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். இந்தியத் தொழில் நிபுணர்கள், டாக்டர்கள், தாதியர்கள், வங்கியாளர்கள், வழக்கறிஞர்கள், விஞ்ஞானிகள், பேராசிரியர்கள், கடுமையாக உழைக்கும் தொழிலாளர்களை உலகம் முழுக்க நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். இந்தியாவின் தொழில்நுட்பத் துறை மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களை யாரால் மறந்துவிட முடியும்? பல தசாப்தங்களாக அவர்கள்தான் வழிகளை உருவாக்கி வருகிறார்கள். திறமைகளின் மையமாக இந்தியா உள்ளது. பங்களிப்பு செய்வதில் ஆர்வமாக, கற்றுக் கொள்வதற்குத் தயாராக உள்ள மக்கள் இருக்கிறார்கள். மிகுந்த பயன்தரக் கூடிய வகையில் இரு வழி ஒருங்கிணைப்பு காணப்படுகிறது.

நண்பர்களே,

இரண்டாவது விடயமாக சீர்திருத்தம் மற்றும் புத்துயிரூட்டுதல் ஆகிய விடயங்களில் இந்தியாவின் திறமையை காணமுடிகிறது.. இயல்பாகவே இந்தியர்கள் சீர்திருத்தவாதிகள்! சமூக அளவிலாக இருந்தாலும் அல்லது பொருளாதார அளவிலாக இருந்தாலும், அனைத்து சவால்களையும் இந்தியா வெற்றி கண்டுள்ளது என்பதை வரலாறு கண்டிருக்கிறது. சீர்திருத்தம் மற்றும் புத்துயிரூட்டல் உத்வேகத்துடன் இந்தியா இதனை செய்திருக்கிறது. அதே உத்வேகம் இப்போதும் தொடர்கிறது.

நண்பர்களே,

ஒருபுறத்தில், உலகளவிலான நோய்த் தொற்றை எதிர்த்து இந்தியா கடுமையாகப் போராடி வருகிறது. மக்களின் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தும் நிலையில், பொருளாதார செழுமை குறித்தும் அதே அளவு கவனத்தை செலுத்தி வருகிறோம். மீட்சி என்று இந்தியா பேசும்போது சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரளவில் நிலையான பயன்தரக் கூடிய கவனத்துடன் கூடிய மீட்சி, அரவணைப்புடன் கூடிய மீட்சி என்பதைப் பற்றித்தான் சிந்திக்கிறோம். இயற்கை அன்னையை எல்லோரும் வணங்கும் கலாசாரத்தைக் கொண்ட நாடாக இந்தியா

உள்ளது. பூமி தான் நமது தாய், நாமெல்லாம் அவரின் பிள்ளைகள் என்ற நம்பிக்கை இந்தியாவில் உள்ளது.

நண்பர்களே,

கடந்த ஆறு ஆண்டுகளில், ஒட்டுமொத்த நிதிப் பங்கேற்பு நிலை, வீட்டு வசதிகள் மற்றும் கட்டுமானம், தொழில் செய்வதை எளிமையாக்குதல், ஜி.எஸ்.டி. உள்ளிட்ட வரி சீர்திருத்தங்கள், உலகில் மிகப் பெரிய சுகாதாரத் திட்டமாக - ஆயுஷ்மான் பாரத் திட்ட அங்குரார்ப்பணம் போன்ற பெரிய விடயங்களை இந்தியா செய்திருக்கிறது. அடுத்த சுற்று வளர்ச்சிக்கான முன்முயற்சிகளுக்கு அடித்தளம் இடுவதாக இந்தப் பணிகள் அமைந்துள்ளன.

நண்பர்களே,

சாத்தியமற்றது என்று கருதும் விஷயங்களை செய்து காட்டும் உத்வேகம் இந்தியர்களிடம் உள்ளது. பொருளாதார மீட்சி என்ற விஷயத்தில் இந்தியாவில் ஏற்கெனவே வளமான மீட்சியைக் கண்டு வருகிறோம் என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை. அத்துடன் நோய்த்தொற்று நெருக்கடி ஏற்பட்டிருக்கும் காலத்திலும் எங்கள் மக்களுக்கு நாங்கள் நிவாரணங்கள் வழங்கி, கட்டமைப்புச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறோம். அதிக உற்பத்தி சார்ந்ததாக, முதலீட்டுக்கு உகந்ததாக, போட்டி நிலை கொண்டதாக பொருளாதாரத்தை நாங்கள் உருவாக்கி வருகிறோம்.

எங்களுடைய நிவாரணத் தொகுப்புத் திட்டங்கள் நேரானதாகவும் ஏழைகளுக்கு அதிக உதவியை வழங்கும் வகையிலும் அமைந்துள்ளன. நாங்கள் செலவிடும் ஒவ்வொரு பைசாவும், பயனாளிக்கு நேரடியாகச் சென்றடைவதற்கு தொழில்நுட்பம் எங்களுக்கு உதவியுள்ளது. இலவச சமையல் எரிவாயு வழங்குதல், வங்கிக் கணக்குகளில் பணம் வைப்பிலிடுதல், கோடிக்கணக்கான மக்களுக்கு இலவசமாக உணவுவகைகள் மற்றும் தானியங்களை வழங்குதல் உள்ளிட்ட ஏராளமான ஏனைய விடயங்கள் இந்த நிவாரண திட்டங்களில் அடங்கும். முடக்கநிலையை நாங்கள் தளர்த்தத் தொடங்கியதும், கோடிக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை அளிப்பதற்காக,

உலகின் மிகப் பெரிய பொதுப்பணிகள் திட்டத்தை நாங்கள் ஆரம்பித்து வைத்துள்ளோம். இது கிராமப்புறப் பொருளாதாரத்திற்குப் புதிய சக்தியை அளிப்பதாக இருப்பதுடன், கிராமப் பகுதிகளில் நீடித்து நிலைக்கும் கட்டமைப்புகளை உருவாக்கவும் உதவியாக உள்ளது.

நண்பர்களே,

உலகில் மிகவும் திறந்த பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா இருந்து வருகிறது. உலகளவிலான நிறுவனங்கள் இந்தியாவுக்கு வந்து தொழில் ஆரம்பிப்பதனை நாங்கள் செங்கம்பளம் விரித்து வரவேற்கிறோம். இன்றைய காலக்கட்டத்தில் இந்தியா வழங்கும் இவ்வாறன வாய்ப்புக்களை, ஒரு சில நாடுகள் மட்டுமே வழங்கும். இந்தியாவில் ஆரம்ப நிலையில் பல்வேறு துறைகளில் ஏராளமான வாய்ப்புகளும், சாத்தியக்கூறுகளும் உள்ளன. வேளாண்மைத் துறையில் எங்களுடைய சீர்திருத்தங்கள், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகத்துறைகளில் முதலீடு செய்ய கவர்ச்சிகரமான வாய்ப்புகளை அளிக்கும். எங்கள் விவசாயிகளின் கடின உழைப்பில் நேரடியாக முதலீடு செய்ய நாங்கள் கதவுகளைத் திறந்துள்ளோம்.

நண்பர்களே,

குறுகிய, சிறிய, நடுத்தரத் தொழில் (MSME) நிறுவனங்கள் துறையில் நாங்கள் சீர்திருத்தங்கள் செய்திருக்கிறோம். பெரிய தொழிற்சாலைகளுக்கு ஒத்திசைவாக MSME துறை இருக்கும். பாதுகாப்புத் துறையில் முதலீடு செய்ய வாய்ப்புக்கள் உள்ளன. வெளிநாட்டு நேரடி முதலீட்டு விதிமுறைகள் தளர்த்தப்பட்டிருப்பதால், உலகின் மிகப் பெரிய இராணுவ கட்டமைப்புக்களில் ஒன்றான இந்தியாவில், அந்நாட்டு இராணுவத்துக்கான பொருள்களை தயாரிக்குமாறு அழைக்கின்றோம். இப்போது, விண்வெளித் துறையில் தனியார் துறையினர் முதலீடு செய்ய அதிக வாய்ப்புக்கள் உள்ளன. மக்கள் நன்மைக்காக வணிக ரீதியில் விண்வெளித் தொழில்நுட்பத்தை பெரிய அளவில் பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்தியாவின் தொழில்நுட்ப மற்றும் ஆரம்பநிலை துறை துடிப்புமிக்கதாக உள்ளது. டிஜிட்டல் திறன் பெற்ற, வளர்ச்சிக்கான உத்வேகம் பெற்ற

கோடிக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காக எவ்வாறான பொருள்களையெல்லாம் நீங்கள் தயாரிக்கலாம் என்பதை நினைத்துப் பாருங்கள்.

நண்பர்களே,

இந்தியாவின் மருந்து உற்பத்தித் துறை இந்தியாவுக்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலகிற்கே பெரிய சொத்தாக உள்ளது என்பதை, நோய்த் தொற்று சூழ்நிலை காலப்பகுதி வெளிக்காட்டியுள்ளது. மருந்துகளின் விலைகளைக் குறைப்பதில், குறிப்பாக வளரும் நாடுகளுக்கு விலைகளைக் குறைப்பதில் இந்தியா முக்கியமான பங்காற்றியுள்ளது. உலக அளவில் குழந்தைகளுக்கான தடுப்பூசி மருந்துகளில் மூன்றில் இரண்டு பங்கு மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன. இன்றைய காலக்கட்டத்திலும் கூட, கோவிட்-19 தடுப்பூசி மருந்து கண்டுபிடித்து உற்பத்தி செய்யும் சர்வதேச அளவிலான முயற்சியில் எங்களுடைய நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. மருந்து கண்டுபிடிக்கப்பட்டதும் அதைப் பெருமளவில் உற்பத்தி செய்வதில் இந்தியா முக்கிய பங்காற்றும் என்பதில் நான் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

நண்பர்களே,

தற்சார்பு இந்தியா திட்டத்துக்கு 130 கோடி இந்தியர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். உள்நாட்டு உற்பத்தி மற்றும் நுகர்வுடன், உலக அளவிலான விநியோகத்தையும் ஒருங்கிணைப்பு செய்வதாக தற்சார்பு இந்தியா திட்டம் உள்ளது. தற்சார்பு என்பது சுயதேவைகளை பூர்த்தி செய்வது என்பதோடு முடிந்துவிடுவதாகவோ அல்லது உலகில் இருந்து விலகி இருப்பதாகவோ அர்த்தம் இல்லை. தேவைகளை சுயமாகப் பூர்த்தி செய்து கொள்வது, சுயமாக உற்பத்தி செய்வது என்பதாக அது அமையும். செயல் திறன், சமநிலை மற்றும் நீடித்துத் தாங்கும் நிலை ஆகியவற்றை ஊக்குவிக்கும் கொள்கைகளை நாங்கள் வலியுறுத்துவோம்.

நண்பர்களே,

இந்த அமைப்பு பண்டிட் ரவிசங்கரின் 100வது பிறந்த தின நினைவையும் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவின் சாஸ்திரிய சங்கீதத்தின் பெருமையை உலகளவில் கொண்டு சென்றவர் அவர். நமஸ்தே என்பது வாழ்த்து சொல்வதற்கான வார்த்தையாக உலகெங்கும் எப்படி பரவியது என்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். யோகா, ஆயுர்வேதம் மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகளை உலக அளவில் அதிகரிக்கச் செய்வதாக இந்த நோய்ப் பரவல் காலம் அமைந்துள்ளது. இந்தியாவின் தொன்மையான கலாசாரம், இந்தியாவின் பிரபஞ்ச அமைதிக்கான நெறிகள் தான் நம்முடைய பலம்.

நண்பர்களே,

உலக நன்மை மற்றும் செழுமைக்காக தன்னாலான அனைத்து பணிகளையும் செய்ய இந்தியா தயாராக உள்ளது. சீர்திருத்தம், செயற்பாடு, நிலைமாற்றம் ஆகியவற்றை கொண்ட இந்தியா புதிய பொருளாதார வாய்ப்புக்களை வழங்குகிறது. மானிடர்களை மையமாகக் கொண்டதும், அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடனான அணுகுமுறைகளை கொண்டமைந்ததுமாக இந்தியா அமைந்துள்ளது.

உங்களுக்காக இந்தியா காத்திருக்கிறது.

நமஸ்தே,

மிக்க நன்றி.

****

கொழும்பு
10 ஜூலை 2020